# காளமேகமும், பொழிலீசரும், மறைநாதரும்

**25/02/2008**

என்றுமே திட்டம் போட்டு செல்கின்ற சுற்றுலாவைக் காட்டிலும், திடீரெனக் கிளம்பி பல் வேறு இடங்களைக் காணும் வாய்ப்புப் பெறும் சுற்றுலாவில் நிறைய இன்பம் உண்டு என்று நம்புபவன் நான். அந்த நம்பிக்கைக்கு உரம் சேர்க்கும் வகையில் நேற்று இருந்தது. அது எப்படி என்று தான் இப்போது காணப் போகின்றோம்!

நேற்று மதுரை மீனாக்ஷி அம்மனைத் தரிசித்து வரலாம் என்று கிளம்பி, எங்கெல்லாம் சென்றோம் என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்!

முகூர்த்த நாளாய் இருந்ததால் அதிகாலையில் விரைவாகச் சென்றால் அம்மனைத் தரிசிப்பது எளிது என்று முடிவு செய்து கொண்டு 6 மணிக்கெல்லாம் கிளம்பினோம் எங்கள் குடும்பமும், அண்ணன் குடும்பமும்.

காலை 7.30 மணிக்கெல்லாம் மதுரை மீனாக்ஷியம்மன் வடக்குக் கோபுர வாசல் வழியாக உள்ளே நுழைந்தோம். அப்போதே கோவில் வழிபடும் அன்பர் கூட்டத்துடனும், பல திருமணங்களுக்கான ஆயத்தங்களோடும் களேபரமாக இருந்தது. சன்னதிக்கு வெளியே இருந்த கூட்டத்தில் பத்து சதவீதம் கூட சன்னதிக்குள் இல்லாதது எங்களுக்கு இன்ப அதிர்ச்சி தந்தது! உள்ளே சாவகாசமாக நின்று அம்மையைத் தரிசித்தோம்.

முக்குறுணி விநாயகரைத் தரிசித்துப் பின் சொக்கநாதரையும் கண்குளிரத் தரிசித்தோம். மீனாக்ஷியம்மன் சன்னதியில் இருந்த அளவு கூட்டம் கூட சொக்கரைக் காண இல்லை. எனவே வெகு நேரம் சொக்கர் சன்னதியில் மனம் லயித்தோம். பின், தக்ஷிணா மூர்த்தி, லிங்கோத்பவர், துர்க்கை அம்மன், சித்தர் சன்னதி என்று மதுரையின் அனைத்து சிறப்பு மிக்க தெய்வங்களையும் ஆராதித்தோம்.

10 மணிக்கெல்லாம் வேலை முடிந்து விட்டதே! கிளம்ப வேண்டியது தானா என்று நினைத்தோம்.

இன்று ஞாயிறு தானே, மதிய உணவு வரை வேறேதேனும் காணாத கோவிலுக்குச் செல்லலாமே என்று நினைத்த போது, அம்மா சொன்னார்கள், மதுரையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலேயே 108 திவ்ய தேசங்களில் ஒரு ஆலயம் இருக்கின்றது. நானும் சென்றதில்லை. எல்லோரும் செல்வோம் என்றார்கள். சரியென்று கிளம்பினோம்.

எங்களின் ஒருநாள் மெய்சிலிர்க்கும் ஆன்மீகப் பயணம் ஆரம்பமானது!

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் வழியில் ஒத்தக்கடையிலிருந்து வலது புறம் திரும்பி ஐந்து கிமீ தூரம் பயணித்து 108 திவ்ய தேசங்களில் 44 வது திவ்ய தேசமான திருமோகூர் சென்றடைந்தோம்.

கோவிலின் பழமையும், அதன் சிறப்பும், தெய்வீகத் தன்மையும், அத்தனை வெயிலிலும் குளிர்ச்சியான சுற்றுப்புறமும் அப்படியே ஆட்கொண்டன என்றால் அது மிகையாகாது.

காளமேகப் பெருமாள் என்ற பெயரில் காட்சியளிக்கும் பெருமாள் மூலவரும் உற்சவரும்

அத்தனை அழகு. இன்னும் கண்ணுக்குள்ளேயே இருக்கின்றது.

மூலவர்: காளமேகப் பெருமாள்/வழித்துணைப் பெருமாள் (மார்க்கபந்து)
தாயார்: மோஹனவல்லித் தாயார்
உத்சவர்: திருமோகூர் ஆப்தன்
உத்சவ தாயார்: மோகனவல்லித் தாயார்
புஷ்கரணி: சீராப்தி புஷ்கரணி
விமானம்: சதுர்முக விமானம்

கோபுரம் சீரமைப்பில் இருக்கின்றது. கோவிலைச் சுற்றிலும் தென்னை மரங்கள் பெருமாளுக்குக் கவரி வீசுகின்றன!

இத்திருத்தலம் திருமங்கையாழ்வார் மற்றும் நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது என்று அறிந்து செய்த புண்ணியத்தால் வந்து தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்ததை உணர்ந்தோம். இக் கோவிலின் சக்கரத்தாழ்வாரை மிகவும் விசேஷமாக கூறுகின்றனர். விஷ்ணு இங்குதான் மோஹினி அவதாரம் எடுத்ததாக கூறப்படுகின்றது. அதனால், இத்தலம், மோகனஷேத்திரம் என்றும் அழைக்கப்படுகிறது.

இணையத்தில் எடுத்த விபரங்களும், படங்களும் காண்போம்!

மூலவர் காளமேகப் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில், வலது கையால் பக்தர்களுக்கு அருள் பாலித்து (வரத ஹஸ்தம்) இடக்கையில் கதாயுதம் ஏந்தி காட்சியளிக்கிறார். மழை தரும் கருமேகம் போல் பக்தகோடிகளுக்கு வரமளித்து அருளுவதால், காளமேகப் பெருமாள் என்ற காரணப் பெயர் பெற்றவர் இவர்! தீர்த்தம் ஷீராப்தி புஷ்கரிணி எனப்படுகிறது. விமானம் கேதகி (பலராமரின் இன்னொரு திருநாமம் கேதன்)விமானம் என்று அழைக்கப்படுகிறது.



தூரத்தில் ஆனைமலையும், தெப்பத்தில் நிறைந்த நீர்வளமும்.



அடுத்ததாய் திருமோகூரில் இருந்து 12 கி.மீ. தொலைவிலேயே இருக்கும் திருவாதவூர் நோக்கிப் பயணமானோம். திருவாதவூர் சிறப்பைச் சொல்லி முடியாது!

சைவக்குரவர்கள் நால்வர் என்று போற்றப்படும் அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், ஞானசம்பந்தர் ஆகியோரில் மந்திரியாய்ப் பணி புரிந்து, ஈசனின் நரியைப் பரியாக்கும் திருவிளையாடல் உருவாகக் காரணமாய் இருந்து, திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்னும் பெயர் பெற்ற திருமுறைகள் மண்ணுக்கு அளித்த மாணிக்க வாசகர் அவதரித்த ஊர்.

கோவிலா, ஈசன் திருமறைநாதரா அல்லது அம்மை வேதநாயகியா யார் அழகு என்று போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்!

வேதநாயகியின் சன்னதியில் இரண்டு திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனவே கூட்டம் அலைமோதியது. நேராய் திருமறைநாதரைத் தரிசித்தோம். சிவபுராணம் பாடி அண்ணனும் அண்ணியும் தெய்வீகமாக்கினார்கள்.

திருவாதவூர்க் கோபுரம்.



வேதநாயகியம்மை சன்னதி. மேலே இருக்கும் வளைவான கல்விதானத்தைப் பாருங்கள்! எத்தனை கலையம்சம்?



கோவிலுக்குள் இருக்கும் மாணிக்கவாசகர் சன்னதி. புளகாங்கிதம் அடையச் செய்தது.




திருவாதவூருக்குள்ளே மாணிக்க வாசகருக்கென்று ஒரு ஆலயமும் உள்ளது. அவர் அவதரித்த இடத்திலேயே அது கட்டப்பட்டுள்ளது. நாங்கள் சென்ற நேரத்தில் மதியம் 12 மணிக்கு மேலானதால் பூட்டப்பட்டுவிட்டது.

இதோ நுழைவு வாயில்.



மதியமாகிவிட்டபடியால், மதுரைக்குத் திரும்பலாம் என்று வாதவூரிலிருந்து வந்த வழியே கிளம்பினோம். அங்கிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் வயல்வெளியில் தூர்ந்து போன நிலையில் இருந்த கோவிலில் ஈசனைக் காணும் வாய்பபுக் கிடைத்தது முன்பிறவிப்பயன் என்றே கருதுகின்றேன்.

அய்யம்பொழில் ஈஸ்வரனைத் தரிசிப்போம் வாருங்கள்.

வயல்வெளிக்குள் காரை இறக்கினோம். பாதையல்லாப் பாதையில் சிறிது தூரம் பயணித்து கோவிலை அடைந்தோம்.

அருகில் செல்கின்றோம்



மிக அருகில்! எப்படித் தூர்ந்து போயிருக்கின்றது என்று பாருங்கள். கரிசக்காட்டுத் தரை என்பதால் போலும்.



கோவிலின் அருகே இருக்கும் தாமரைக் குளம்! அதுவும் வயலுக்கு நடுவிலேயே!



கோவிலுக்குள்ளே அய்யம்பொழில் ஈஸ்வரர். பிறை சூடி எத்தனை அழகாய்க் காட்சியளிக்கின்றார் பாருங்கள்!



வழக்கமாய் கருவறை இருட்டாய் இருக்கும். வெளியே வெளிச்சமாய் இருக்கும். இங்கோ

கருவறைக்குள்ளே எத்தனை வெளிச்சமாய் இருக்கின்றது பாருங்கள்.




வெளியிலிருந்து இறைவனை நோக்கியவண்ணம் அருள்பாலிக்கும் நந்தியம்பெருமான்



கொள்ளையழகுடன், தன்னந்தனியராய் அய்யம்பொழில் ஈஸ்வரன் பிரகாசத்துடன் அருள் பாலிக்கின்றார்.

மனதில் இன்ப வெள்ளத்துடன், அவரைக் கண்ட திருப்தியுடன் மதியம் மதுரையில் உணவருந்தி, மாலை 4 மணிக்கெல்லாம் இல்லம் திரும்பினோம்.. இந்தக் குறுஞ்சுற்றுலா உங்களுக்கும் உவப்பாய் இருந்தது தானே?